[திரு. எம். எம் எஸ். அபுல்ஹசன்] [1992 மார்ச் 12

பிற்பகல் 12–50

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எனது தொகுதியான மயிலாடுதுறை நகரிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு அதிக அளவில் நோய் தீர்க்கும் மருந்துகளை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. மேலும் அங்கு ஒரு ஜெனரேட்டர் பொருத்தப்படாமல் இருக்கிறது. மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் ஒரு ஜெனரேட்டரை அவசியம் பொருத்திக் கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சரவர்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியான மயிலாடுதுறையில் இருக்கும் ஒரே ஒரு பேரூராட்சியான மணல்மேடு மருத்துவமனையில் இதுவரையில் ஒரு பெண் மருத்துவர்கூட நியமனம் செய்யப்படாமல் அதன் காரணமாக இன்றைய தினம் அங்கே பெண்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அங்கே ஒரு பெண் மருத்துவரை உடன் நியமனம் செய்ய வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியம் போசங்காடு கிராமத்தில் ராஜ வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமாய் இந்த அரசை வேண்டுகிறேன். நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகையில் 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 5. அறிவிப்பு.

### (அ) பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் ஒப்புதலுடன் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

24–3–1992 செவ்வாய்க்கிழமை எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருட்கள்:

1. 1992–93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகளை பேரவை முன் வைத்தல்.

1992 மார்ச் 12] [பேரவைத் தலைவர்]

2. 1991–92 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தல்.

3. மானியக் கோரிக்கைகள் விவாதம்.—

மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம்.

மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்து பணிகளும், கப்பல் போக்குவரத்தும்.

மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை.

மானியக் கோரிக்கை எண் 58—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூல தனச் செலவு.

மானியக் கோரிக்கை எண் 59—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

25–3–1992—புதன்கிழமை:

மானியக் கோரிக்கை எண் 47—செய்தி திரைப்பட தொழில்நுட்பவியல்.

மானியக் கோரிக்கை எண் 51—சுற்றுலா.

மானியக் கோரிக்கை எண் 52—தமிழ் வளர்ச்சி பண்பாடு.

ஏற்கெனவே அறிவித்துள்ள நிகழ்ச்சி நிரலில் 24 ஆம் தேதி எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள் 25 ஆம் தேதியும், 25 ஆம் தேதி எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள் 24 ஆம் தேதியும் எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலின்படி முன்பண செலவிற்கான கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தலும் மற்றும் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தலும், ஏற்கெனவே அறிவித்தபடி 24 ஆம் தேதியே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS